## 6.8 பெரியார் நினைவு சமத்துவபுர வீடுகளுக்கு ‘சிமெண்ட் ஜாலி’ ஜன்னல்களுக்குப் பதிலாக கதவுகள் கொண்ட ஜன்னல்கள் அமைத்தல்

ஊரக வளர்ச்சி (மதி2) துறை

அரசாணை (நிலை) எண்.5 நாள் : 5.1.2000

படிக்க:

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (நி.எ.4) துறை. அரசாணை (நிலை) எண்.171 , நாள் 22.10.97
2. அரசுச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் எழுதப்பட்ட நேர்முகக் கடித எண்.31262, ந.எ.2/97–30 நாள் 7.12.98
3. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–10) துறையின் அரசாணை நிலை எண்,66 நாள் 8.6.1999

**ஆணை**

பார்வை 1ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில், மாவட்டங்களில் சமத்துவபுரம் குடியிருப்பு அமைத்தல் தொடர்பாக விரிவான ஆணைகள் வெளியிடப்பட்டன. இதே ஆணையில, ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 100 வீடுகள் அமைய வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது. தற்பொழுது பெரியார் நினைவு சமத்துவபுர குடியிருப்பு ஒன்றிற்கு அரசு வழங்கும் ஒட்டுமொத்த மானியமாக ரூ.35,000/– வழங்கப்படுகிறது. மேலும், பயனாளி ஒருவர் குடியிருப்பு ஒன்றுக்கு சமவெளிப் பகுதியாக இருப்பின் ரூ.10,000/–, மலைப்பகுதியாக இருப்பின் ரூ.12,000/– கடனாகப் பெற்று, ஒவ்வொரு வீட்டினையும் ரூ.45,000 / 47,000/– மதிப்பீட்டில் கட்டிக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2. முன்பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிதி வரம்பிற்குள், எதிர்காலத்தில் கட்டப்படும் அனைத்து பெரியார் நினைவு சமத்துவபுர வீடுகளுக்கும் மழைக்காலங்களில் நீர் வீட்டிற்குள் வருவதைத் தடுக்க, கதவுகள் கொண்ட ஜன்னல்களையே அமைக்க வேண்டுமென்று அரசு ஆணையிடுகிறது. இந்த ஆணையை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

3. இந்த ஆணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.201/ஊ.வ.து. நாள் 4.1.2000 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலர்